தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஒருபோக சாகுபடி விவசாயத்துக்கு தண்ணீர்: பொதுப்பணித் துறை செயலருக்கு நீதிமன்றம் உத்தரவு

பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தில், மேலூர் ஒருபோக சாகுபடி விவசாயத்துக்கு 3 நாள்களுக்கு தண்ணீர் திறப்பது குறித்து, அவசரக் கூட்டம் நடத்தி முடிவு எடுக்குமாறு, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலருக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தில், மேலூர் பகுதிக்கு 5 நாள்களுக்கு தண்ணீர் திறக்க உத்தரவிடக் கோரி, மேலூர் பகுதி விவசாயிகள் மனுத் தாக்கல் செய்திருந்தனர். பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தை நம்பி, மேலூரில் 85 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. பால் பிடிக்கும் நிலையில், தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் இளம் பயிருக்கு வழங்கும் நீரினை 3 நாள்கள் மட்டும் நிறுத்திவிட்டு, பால்பிடிக்கும் பருவத்தில் உள்ள மேலூர் பகுதிக்கு வழங்குவது அரசிடம் கேட்டு வெள்ளிக்கிழமைக்குள் பதில் தெரிவிக்குமாறு, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், நீதிபதிகள் ஆர். சுதாகர், வி.எம். வேலுமணி முன்னிலையில், இந்த மனு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் கே. செல்லப்பாண்டியன் வாதிடுகையில், பெரியாறு அணையின் இப்போதைய நீர் இருப்பு குறைவாகவே உள்ளது.

பெரியாறு அணையில் இருந்து 240 மில்லியன் கனஅடி திறந்துவிடப்பட்டாலும், அந்த தண்ணீர் வைகை அணையை அடைய 62 கி.மீ. வர வேண்டும். பின்னர்,

வைகை அணையில் இருந்து மேலூர் ஒருபோக சாகுபடி பகுதிக்கு 55 கி.மீ. தூரம் வரவேண்டும். அவ்வாறு வரும்பட்சத்தில், 120 மில்லியன் கனஅடி மட்டுமே கிடைக்கக்கூடும். இப்பகுதியில் இருக்கும் பயிர்களைக் காக்க இதுபோதுமானதாக இருக்காது என்றார். பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் சமர்ப்பித்த மனுவில், பெரியாறு அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கால்வாயில் வரும்போது, குடிநீருக்காக அமைக்கப்பட்டுள்ள நீரேற்றும் கிணறுகளுக்கும் தண்ணீர் சென்றுவிடும். மேலும், வைகை அணையானது, நீர்ப் பங்கீடு ஒப்பந்த அடிப்படையில் உள்ள பாசனத் திட்டமாகும். நீர்ப் பங்கீட்டுக்கு மாறாக, மேலூர் ஒருபோக சாகுபடிக்குத் தண்ணீர் திறக்க இயலாது. அத்துடன், வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டால் மதுரை மாவட்டத்துக்கு குடிநீர் வழங்க இயலாமல் போய்விடும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் பீட்டர் ரமேஷ்குமார் வாதிடுகையில், நெற்பயிர் பால்பிடிக்கும் நிலையில் உள்ளது. ஒரு நனைப்புக்கு 3 நாள்களுக்கு மட்டும் தண்ணீர் கிடைத்தால், இப் பயிர்களைக் காப்பாற்றிவிடலாம். ஏனெனில், மேலூர் பகுதி முழுவதுமே விவசாயத்தை நம்பியே இருக்கிறது என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், பெரியாறு-வைகை பாசன விவசாயிகளுடன் அவசரக் கூட்டத்தை சனிக்கிழமை நடத்தி, தண்ணீர் திறப்பது குறித்து முடிவு எடுக்குமாறு, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலருக்கு உத்தரவிட்டனர். மேலும், அதன் விவர அறிக்கையை ஜனவரி 6 ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டனர்.

### பயிர் காப்பீடு வழங்கக்கோரி திமுக ஆர்ப்பாட்டம்

திருவாடானையில் திமுக சார்பில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு தொகை வழங்கக்கோரி திமுக விவசாய அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவாடானை தாலுகா முழுவதும் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டு கடும் வறட்சி நிலவியது. இப்பகுதி விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்தும் இந்த ஆண்டு இது வரை பயிர் காப்பீடு இழப்பீடு தொகை வழங்காததை கண்டித்து

மாவட்ட திமுக விவசாய அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருவாடானை தாலுகா அலுவலகம் முன்பாக வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட திமுக விவசாய அணி செயலாளர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை உறுப்பினர் தங்கவேலன், முன்னாள் அமைச்சர் தென்னவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், ஒன்றிய கவுன்சிலர் முகம்மது முக்தார், திமுக மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் வீரமணி,மாவட்ட மீனவரணி செயலாளர் ஹபீப் முகம்மது ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 500க்கும் மேற்றபட்ட விசாயிகள் கலந்து கொண்டனர். ஒன்றிய விவசாய அணி செயலாளர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

### சேவூரில் ரூ.11.37 லட்சம் வாழைத்தார்கள் ஏலம்

சேவூர் ஏல மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.11.37 லட்சத்திற்கு வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சார்பில், சேவூரில் நடைபெற்ற ஏலத்திற்கு 7,460 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. நேந்திரன் கிலோ ரூ.25 முதல் ரூ.35.80 வரையிலும், கதளி கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரையிலும் ஏலம் போயின. மொத்தமாக நேந்திரன் வாழைத்தார்கள் ரூ.11 லட்சத்து 37 ஆயிரத்து 104-க்கு ஏலம்போயின.

சக்தி, குருமந்தூர், மலையப்பாளையம், கோபி, திங்களூர், பொள்ளாச்சி, அன்னூர், அவினாசி வட்டம், நம்பியூர், பெருந்துறை ஆகிய ஊர்களிலிருந்து 300 விவசாயிகள் நேந்திரன் வாழைத்தார்களை கொண்டு வந்திருந்தனர் .

கடந்த வாரத்தை விட நேந்திரன் வரத்து அதிகமாக இருந்ததாக சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

**அரசு நேரடி நெல் கொள்முதல் பள்ளிபாளையத்தில் நாளை தொடக்கம்**

அரசு நேரடி நெல் கொள்முதல் பள்ளிபாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை

தொடங்க உள்ளது. இதற்காக நெல் கொள்முதல் விலையை மாவட்ட நிர்வாகம் நிர்ணயம் செய்து அறிவித்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 8,125 ஹெக்டேர் (20,312 ஏக்கர்) பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதில், மேட்டூர் கிழக்குக் கரை பாசனப் பகுதிகளுக்கு உள்பட்ட பள்ளிபாளையம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மட்டும் திருந்திய நெல் சாகுபடி முறையில் 3000 ஹெக்டேரிலும், வழக்கமான சாகுபடி முறையில் 1231 ஹெக்டேரிலும் என மொத்தம் 4231 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. மாவட்டம் முழுவதும் தற்போது அறுவடைப் பணி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து, அறுவடை செய்யப்படும் நெல்லை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்திடும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்க உள்ளது.

இதையடுத்து, கொள்முதல் செய்வதற்கான விலையை நிர்ணயம் செய்து மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதன்படி, சன்னரக நெல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.1345, ஊக்கத்தொகையாக ரூ.70ம் சேர்த்து மொத்தம் ரூ.1415-ம், பொது ரகம் குவிண்டாலுக்கு ரூ.1310, ஊக்கத்தொகையாக ரூ.50-ம் சேர்த்து மொத்தம் ரூ.1360-ம் வழங்கப்படும்.

இரு ரகத்துக்கும் ஈரப்பதம் 17 சதத்துக்குள் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பள்ளிபாளையம் எலந்தக்குட்டை ஸ்ரீ பொன்காளியம்மன் மண்டபத்தின் அருகே உள்ள கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு நெல் கொள்முதல் நிலையத்தை அமைச்சர் பி.தங்கமணி ஞாயிற்றுக்கிழமை தொடக்கிவைக்க உள்ளார்.

### "நாமக்கல்லில் வெப்பம் அதிகரிக்கும்

தற்போதைய வானிலையில் மேகமூட்டமும், தொடர்ந்து வெப்ப அளவுகளும் உயர்ந்து காணப்படும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஜன.4 முதல் 7-ஆம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். செவ்வாய்க்கிழமை மட்டும் 5 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 3 கிமீ முதல் 4 கிமீ வேகத்தில் தென்கிழக்கு, கிழக்கு திசையிலிருந்து வீசக் கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 64.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 86 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 40 சதம் முதல் அதிகபட்சம் 79 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: தென்மேற்கு வங்காள விரிகுடாவில் கடலோரப் பகுதியில் தோன்றியுள்ள குறைந்தழுத்த காற்று மண்டலத்தால் மேகமூட்டமும், தொடர்ந்து வெப்ப அளவுகளும் சற்று உயர்ந்து காணப்படும். மேகமூட்டத்தால் காற்றின் ஈரப்பதமும் பகலில் அதிகரித்து நிலவும். முதல் மூன்று வாரங்களுக்கு செயற்கை முறையில் வெப்பமளிப்பதை அதிக வெப்ப மாற்றமன்றி பின்பற்ற வேண்டும். கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொண்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக்குழாய் நோய், ஈகோலை கிருமிகளால் ஏற்படும் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. தவிர, குடிநீரில் கிருமிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பண்ணையாளர்கள் குடிநீரைப் பரிசோதித்து, அதற்கேற்ப கிருமிநாசினி மருந்துகளை உபயோகப்படுத்தவும், பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடிக்கவும் வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு..: கறவை மாடு, ஆடு வளர்க்கும் விவசாயிகள் வசதிக்கேற்ப குறைந்தது 10 சென்ட்டில் அனைத்து வகையான தீவனப் பயிர் சாகுபடி செய்யலாம். அந்த நிலத்தை மூன்றாகப் பிரித்து, 4 சென்ட் நிலத்தில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ-4, 3 சென்ட் நிலத்தில் கோ,

எஃப்எஸ்-29 தீவனச் சோளத்தையும், மீதமுள்ள 3 சென்ட் நிலத்தில் வேலிமசால் தீவனத்தையும் சாகுபடி செய்ய வேண்டும். வரப்பு ஓரங்களில் அகத்தி, கிளரிசிடியா, சூபாபுல் ஆகிய மரவகைத் தீவனங்களையும் நடவு செய்ய வேண்டும். இதன்மூலம், ஒரு கறவை மாடு, 5 ஆடுகளுக்கு ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் அளிக்க முடியும்.

தென்னையில் கருந்தலைப் புழுவின் பாதிப்பு நவம்பர் முதல் மே மாதம் வரையிலான தட்வெப்பநிலையில் ஏற்பட வாய்ப்புள்ளது. தவிர, இந்தக் காலக்கட்டத்திலும், மழைக்குப் பிறகும் புழுவின் தாக்கம் அதிகரித்து பாதிப்பை ஏற்படுத்தும். இந்தப் புழுவைக் கட்டுப்படுத்த ப்ரக்கோனிட் ஒட்டுண்ணியை ஜனவரி மாதத்தின் தொடக்கத்தில் விட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 1000-1200 எண்ணிக்கை வரை விடலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் வேளாண் விற்பனை நிலையத்துக்கு பருத்தி வரத்து அதிகரிப்பு**

பருத்தி விளைச்சல் அதிகரித்ததால், நாமக்கல் கூட்டுறவு வேளாண் விற்பனை நிலைய ஏலத்துக்கு வாரந்தோறும் வரத்து அதிகரித்து வருகிறது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி, சேலம், பெரம்பலூர், கரூர், திருச்சி மாவட்டத்தின் துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளைக் கொண்டு வருகின்றனர். இந்த பருத்திகளை ஏலம் கோரி வாங்கிட கோவை, திருப்பூர், பல்லடம், கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் வருகை புரிகின்றனர்.

ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மே மாதம் வரை பருத்தி அறுவடை நடைபெறுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் பருத்தி வரத்து அதிகரித்துக் காணப்படும். இதன்படி, நிகழாண்டு டிசம்பர் இரண்டாவது வாரத்திலிருந்தே பருத்தி மூட்டைகளின் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. இதன்படி, கடந்த மூன்று வாரங்களாக 2000-இல் இருந்து 3500 மூட்டைகள் வந்த நிலையில், இந்த வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 5 ஆயிரம் மூட்டைகள் வந்தன.

அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4869 முதல் ரூ.5350 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.6,710 முதல் ரூ.7,259 வரைக்கும் என மொத்த பருத்திகளும் ரூ.ஒரு கோடிக்கு ஏலம் போனது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் குவிண்டாலுக்கு ரூ.200 வரை குறைந்து காணப்பட்ட நிலையில், இந்த வாரம் பருத்தி விற்பனைத் தொகை அதிகரித்திருப்பது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விளைச்சல் நன்றாக இருப்பதால், அடுத்த வாரம் பருத்தி வரத்து மேலும் அதிகரிக்கும் என்று கூட்டுறவு வேளாண் விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறியது: பருத்தி பயிர்களுக்கு அதிகப்படியான தண்ணீர் தேவையில்லை. இந்த நிலையில், கடந்தாண்டு மழைப் பொழிவு குறைந்திருந்ததால் நிகழாண்டு விவசாயிகள் பருத்தியை அதிகளவில் பயிரிட்டனர். தொடர்ந்து, பருத்தி பயிருக்கு தேவையான அளவு மழையும் கிடைத்ததால், பரவலாக எல்லா இடங்களிலும் பருத்தி விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக, ஏலத்துக்கு வரும் பருத்தி மூட்டைகளும் அதிகரித்துள்ளது. மே மாதம் வரை அறுவடை காலம் என்பதால் பருத்தி வரத்து மேலும் அதிகரிக்கக் கூடும் என்றனர்.

**வாழைகளை தாக்கும் வாடல் நோய்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாழைகள் வாடல் நோய் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாகலூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி, பர்கூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

நெய்பூவன் என அழைக்கப்படும் ஏலக்கி வாழை ரகத்தை அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர். கிருஷ்ணகிரியை அடுத்துள்ள மல்லிநாயனப் பள்ளியில் 1.5 ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயி தேவேந்திரன் (48) கூறியது:

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வாழைக் கன்றுகளை வாங்கி நடவு செய்து நன்றாக வளர்ந்துள்ளன. சில நாள்களாக வாழை இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, பின்னர்

சிறிது நாள்களிலேயே பாதிக்கப்பட்ட இலையின் காம்புகள் ஒடிந்து விடுகின்றன. 4 அல்லது 5 வாரங்களில் மரங்கள் காய்ந்து விடுகின்றன.

இப்போது வாடல் நோய் தாக்குதலால் பல ஆயிரம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார் அவர். இந்த நோய் குறித்து டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தராஜ் கூறியது:

பொதுவாக ஏலக்கி வாழை மரத்தில் ஒரு வகை பூஞ்சானால் பரவக் கூடிய பனாமா என்ற ஃப்யூசேரியம் என்ற வாடல் நோய் தாக்குவதில்லை. இந்த பூஞ்சானின் வீரியம் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக இருப்பதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த நோய் தாக்குதல் அதிகமாக இருக்கிறது.

வளமான, சிறிது கார குணமுடைய மண் வகைகளில் நல்ல வடிகால் வசதிகள் செய்து கரும்புச் சக்கையை பரப்பி யூரியா, உரமிடுதல் மூலம் வாழையை இந்த நோயிலிருந்து காப்பாற்ற சிறந்த வழியாகும்.

வயலில் நீரைத் தேக்கி வடித்து 6 மாதங்கள் வேறு பயிர் செய்யாமல் காய விடுவதன் மூலம் நோய்க் கிருமிகள் வாழ்விழந்து தோட்டம் தூய்மையாக்கப்படும்.

நோயால் கடுமையாக பாதிக்கப்பட்ட மரத்தை கிழங்கோடு தோண்டி எடுத்து எரிக்க வேண்டும். மேலும் நோய் பரவுவதைத் தடுக்க நோய் காணும் குழியில் சுண்ணாம்பை குழிக்கு 1.2 கிலோ வீதம் போட்டி ஆற செய்யலாம்.

3 மில்லி 2 சத கார்பென்டாசிம் கரைசலை 45 டிகிரி கோணத்தில் கிழங்கில் 10 செ.மீ. ஆழத்தில் ஊசி மூலம் உள் செலுத்த வேண்டும். ஒரு மாத இடைவெளியில் மீண்டும் ஊசி மூலம் மருந்தை செலுத்துவன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். மேலும் விவரங்களுக்கு 04343-296039 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்

### ஆதரவு விலை: கரும்புக்கு கூடுதலாக ரூ. 150 வழங்க முடிவு

கர்நாடகத்தில் கரும்புக்கு டன்னுக்கு வழங்கப்படும் கொள்முதல் விலையுடன் ரூ.150 கூடுதலாக அளிக்க அந்த மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பெங்களூரு விதான செப்தாவில் வெள்ளிக்கிழமை கர்நாடக முதல்வர் சித்தராமையா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சர்க்கரைத் துறை அமைச்சர் பிரகாஷ் ஹுக்கேரி, செய்தியாளர்களிடம் கூறியது: கரும்புக்கு டன்னுக்கு கொள்முதல் விலையாக ரூ. 2,500 வழங்க ஏற்கெனவே அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிலையில், கொள்முதல் விலையுடன் சேர்த்து கூடுதலாக ரூ.150 வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் 2 தவணையாக இந்த ஆதரவு விலை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்த பருவத்தில் 3 லட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்படும். டன்னுக்கு கரும்புக்கு ஆதரவு விலையாக ரூ.150 வழங்குவதைத் தொடர்ந்து, மாநில அரசுக்கு கூடுதலாக ரூ. 450 கோடி செலவாகும். சர்க்கரை விலை சரிந்துள்ள நிலையில், சர்க்கரை நிறுவனங்கள் மாநில அரசு அறிவித்துள்ள கரும்புக்கான கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு அளிக்க வசதியாக, கரும்பு மீதான மதிப்புக் கூட்டு வரி, கொள்முதல் வரி, சாலை வரியை நீக்கியுள்ளோம் என்றார் அவர்.

### கடலோர மாவட்டங்களில் நாளை முதல் கனமழை பெய்யும்

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றவுத்த தாழ்வு பகுதி வலுவடைந்திருப்பது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:-

வங்கக் கடலில் தென்கிழக்குப் பகுதியில் அண்மையில் உருவான காற்றழுத்தத் தாழ்வு பகுதி தற்போது வலுவடைந்து தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. சனிக்கிழமையன்று (ஜனவரி 4) அது மேலும் வலுவடைந்து தாழ்வு மண்டலமாக மாறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாழ்வு மண்டலமாக மாறும்பட்சத்தில் அது தமிழகத்தை நோக்கி வருவதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

ஒரு எக்டேருக்கு 165 டன் வாழை விளைச்சல்



தேனி: தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டியை சேர்ந்த வாழை விவசாயி வி.குருநாதன், ஒரு எக்டேரில் 165 டன் வாழை விளைவித்து, உலகளவில் சாதனை படைத்துள்ளார்.

விவசாய கூலி தொழிலாளியாக தனது வாழ்க்கையை தொடங்கியவர் வி.குருநாதன்,75. 45 ஆண்டுகளுக்கு முன் நிலத்தை குத்தகைக்கு எடுத்து வாழை சாகுபடி செய்தார். இன்று ஒரு எக்டேரில் 165 டன் வாழை விளைச்சல் எடுத்துள்ளதால், உலகின் முதல் சாதனை வாழை விவசாயி என தோட்டக்கலைத்துறை அதிகாரிகளால் பாராட்டு பெற்றுள்ளார். நாடு முழுவதும் இருந்து விஞ்ஞானிகள் இவரது தோட்டத்திற்கு வந்து ஆய்வு நடத்தி வருகின்றனர். தற்போது, 150 ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரரான இவர், முழு பரப்பிலும் ஜி 9 திசு வாழை சாகுபடி செய்து வருகிறார்.

குருநாதன் கூறியதாவது: 1990ம் ஆண்டு 13 ஆயிரம் வாழைத் தார்களை 16 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். அப்போது, இது மிகப்பெரிய

சாதனையாக கருதப்பட்டது. இப்போது, 8500 வாழைத்தார்களை 70 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளேன். இதனை மிகப்பெரிய சாதனை, என தோட்டக்கலைத்துறையினர் கூறுகின்றனர். இப்போது, என் நிலத்தில் எக்டேருக்கு 165 டன் வாழை விளைச்சல் எடுத்து வருகிறேன். ஆனாலும் தோட்டக்கலைத் துறையினர் சராசரியாக கணக்கிட்டு 150 டன் மதிப்பீடு செய்து, இதனையே உலக சாதனை என்கின்றனர். 150 ஏக்கரிலும், சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ளோம். இவ்வாறு கூறினார்.

**பால் விலை உயர்வால் அரசு அதிர்ச்சி: நடவடிக்கைக்கு அதிகாரிகள் தீவிரம்**

'பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டாலும், பால் விற்பனை விலை உயர்த்தப்படாது' என, முதல்வர் அறிவித்ததை மீறி, சில மாவட்டங்களில், பால் கூட்டுறவு சங்கங்கள், தன்னிச்சையாக பால் விலையை உயர்த்தி உள்ளன. 'இதுகுறித்து, விசாரணை நடத்தி, விலை உயர்வை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், கொழுப்புச் சத்து அளவை பொறுத்து, பசும்பால் லிட்டருக்கு, 23 முதல் 25 ரூபாய் வரையும், எருமைப் பால், 28 முதல் 31 ரூபாய் வரை கொடுத்து வாங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர் கோரிக்கையை ஓரளவுக்கு ஏற்று, பசும்பால் மற்றும் எருமைப் பால், கொள்முதல் விலையை, லிட்டருக்கு, 3 ரூபாய் உயர்த்திய அரசு, 'நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும், பால் விலை உயர்த்தப்படாது' என, அறிவித்தது. எனினும், சேலம் மாவட்டத்தில், நுகர்வோருக்கு இம்மாதம், 1ம் தேதியில் இருந்து, 1 லிட்டர் பசும்பாலுக்கு, 3 ரூபாய் உயர்த்தப்பட்டு, 28 ரூபாய்க்கும், எருமைப்பால் லிட்டருக்கு, 5 ரூபாய் உயர்த்தப்பட்டு, 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில், இம்மாதம், 1ம் தேதியில் இருந்து, பசும்பால் விலை, கிராமங்களில், லிட்டர், 25 ரூபாய்; நகரங்களில், 26 ரூபாய் என, உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஒப்புதல் இன்றி, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், தன்னிச்சையாக, பால் விற்பனை விலையை, திடீரென உயர்த்தியது பொதுமக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### தீர்மானம்:

இது குறித்து, சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் ஒருவர் கூறியதாவது: பால் கொள்முதல் விலையை உயர்த்தியதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு சங்க இயக்குனர் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றி, பால் விற்பனை விலையை உயர்த்திக் கொள்ள, அதிகாரிகள் வாய்மொழி உத்தரவிட்டனர். அதன்படி, சில்லரை பால் விற்பனை விலை உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார். இது குறித்து, பால்வளத் துறை அதிகாரிகளை கேட்டபோது, 'பால் விற்பனை விலையை உயர்த்த, அனுமதி அளிக்கவில்லை. ஒரு சில ஊர்களில், விலை உயர்த்தப்பட்டுள்ளதாக, செய்தி வெளியாகி உள்ளது. இதுகுறித்து, விசாரித்து வருகிறோம். விசாரணைக்கு பின், அரசிடம் கலந்து ஆலோசித்து, விலையை குறைக்க, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றனர்.

### பருவமழை காலம் முடிந்தாலும் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில், வடகிழக்கு பருவமழைக் காலம், டிசம்பருடன் முடிவடைந்தது. இருந்தாலும், "சில நேரங்களில், மழை பெய்யும்' என, ஏற்கனவே, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. இதை மெய்ப்பிக்கும் விதமாக, தென்மேற்கு வங்கக் கடலில், சில தினங்களுக்கு முன், குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது; மேற்கு நோக்கி நகர்ந்தது. தற்போது அது, குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருமாறி, காற்று மேலடுக்கு சுழற்சியுடன் இணைந்து, நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது: அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழக கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும். 48 மணி நேரத்தில், டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## உச்சத்தில் 'கோடை மாங்காய்'

பெரியகுளம்: தேனி மாவட்டம், பெரியகுளம், சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வறட்டாறு, கருங்கல் பகுதிகளில், 5000 ஏக்கரில், மா சாகுபடி செய்யப்படுகிறது. 'சீசன்' ரக மா மரங்கள் நவம்பர், டிசம்பர், ஜனவரியில் பூக்கள் பூக்கும். மார்ச்சில் மா பிஞ்சாகவும், ஏப்ரல் மாதம் மாங்காய் கிடைக்கும். பெரியகுளம் தோட்டக்கால் பகுதிகளில் மல்கோவா, பங்கனபள்ளி, சப்போட்டா, காசா, நாட்டு ரக மாங்காய்கள் விளையும். 'கோடை மாங்காய்', நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யப்படும். பெரியகுளம் சின்னாம்பாளையம், லட்சுமிபுரம் பகுதிகளில், 'கோடை மாங்காய்' விளைச்சல் உள்ளது. 'சீசன்' மாங்காயை விட, 'கோடை மாங்காய்' விலை இருமடங்கு. தற்போது, மூன்று ரக காய்கள் மட்டும் விளைந்துள்ளன. கசா, டன் 40 ஆயிரம் ரூபாய்; பங்கனபள்ளி, 60 ஆயிரம்; கல்லாமை 30 ஆயிரம் ரூபாய், என சென்னை, மதுரை மற்றும் கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

## பெரியாறு நீர் மட்டம் குறைவதால் 25 நாட்கள் விவசாயத்திற்கு தண்ணீர்

கம்பம்: முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் குறைவதால், இரண்டாம் போக சாகுபடிக்கு அதிகபட்சமாக 25 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் தரமுடியும், என பொதுப்பணித்துறையினர் கூறியுள்ளனர்.

பெரியாறு பாசனத்தில், கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி நடக்கிறது. சில ஆண்டுகளாகவே, பருவமழை பொய்த்து வருவதால், ஒரு போக சாகுபடி கைவிடப்படும் நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, தற்போது இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கம்பத்தில் மட்டும் 2 மாதங்களுக்கு முன்பே நடவு செய்தனர். பிற பகுதிகளில் தற்போது தான் நடவு பணிகள் துவங்கியுள்ளது. கம்பம் பகுதிக்கு இன்னும் 40 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படும். பிற பகுதிகளுக்கு 90 நாட்களுக்கு தண்ணீர் தேவை.அணை நீர் மட்டமோ மளமளவென குறைந்து, தற்போது 114.80 அடியாக உள்ளது. விநாடிக்கு 150 கனஅடி நீர் வரத்து உள்ளது. 344 கனஅடி திறக்கப்படுகிறது. இதனிடையே மதுரை மேலூர் பகுதிக்கு தண்ணீர் திறந்து விட,

மதுரை ஐகோர்ட் கிளையில் பொதுநல வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. ஐகோர்ட் வழக்கு, இரண்டாம் போக சாகுபடி நிலவரம் குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது: ' அணையில் தற்போது 1,727 மில்லியன் கன அடி இருப்பு உள்ளது. இதில் 496 மில்லியன் கன அடி மட்டுமே விவசாயத்திற்கு எடுக்க முடியும். தற்போது திறக்கும் 344 கன அடியை தொடர்ந்தால், இன்னும் 16 நாட்களுக்கு மட்டுமே விவசாயத்திற்கு தண்ணீர் தரமுடியும். தினமும் 200 கனஅடி விடுவித்தால் 25 நாட்களுக்கு தரலாம். ஆனால், 200 அடியாக குறைத்தால் தேனி குன்னூர் வரை குடிநீருக்கு கூட போகாது. 112 அடிக்கு கீழ் போகும் போது 200 கனஅடி எடுக்கலாம். 111 அடியாகும் போது, 100 கனஅடியாக எடுக்கலாம். ஆனால், குடிநீருக்கு மட்டுமே அதை பயன்படுத்த முடியும். மழை பெய்து, அணை நீர் மட்டம் உயர்ந்தால் மட்டுமே இரண்டாம் போகம் தப்பிக்கும்,' என்றனர்.

பண்ணைகளில் நோய் தாக்குதல்: இறால் மீன் விலை கடும் வீழ்ச்சி



ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இறால் பண்ணைகளில், நோய் தாக்கியுள்ளதால், கிலோ 800க்கு விற்ற இறால் மீன்கள், உள்ளூர் மார்க்கெட்டில் 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில், ராமேஸ்வரம், மீமிசல், தொண்டி, திருப்புல்லாணி, கோட்டைபட்டினம், நாகபட்டினம், திருச்செந்தூர், பழைய காயல்பட்டினம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் உள்ள 300க்கும் மேற்பட்ட பண்ணைகள் உள்ளன. இவற்றில் இருந்து ஆண்டுக்கு 2 முறை, இறால் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம், பலகோடி ரூபாய் அன்னிய செலவாணி கிடைத்து வந்தது. தற்போது இந்த பண்ணைகளில், நோய் தாக்கியுள்ளதால், இறால் மீன்களை, இறக்குமதி செய்ய வெளிநாட்டு கம்பெனிகள்

மறுத்து வருகின்றன. இதனால், பல கோடி ரூபாய் அன்னிய செலாவணி கிடைப்பது பாதித்துள்ளது. பண்ணை உரிமையாளர்கள் சிலர் கூறுகையில்," பண்ணைகளில், 10 ஆண்டுகளுக்கு பின், வெண் புள்ளி நோய் தாக்கியதால், இறால்களை வெளிநாடுகள் வாங்க மறுத்து விட்டன. இதனால், இந்திய மதிப்பில் கிலோ 800 ரூபாய்க்கு விற்ற இறால்களை, தற்போது ரூ.200க்கு உள்ளூர் மார்க்கெட்களில் விற்கிறோம். இந்த இறாலால் பாதிப்பு ஏற்படாது," என்றனர். கடல் உணவு ஏற்றுமதி நிறுவன நிர்வாகி முருகேசன் கூறுகையில்," பண்ணைகளை நன்கு பராமரிக்க தவறினாலும், ஒரு அறுவடைக்கு பின், 40 நாட்கள் கழித்து இறால் குஞ்சுகளை அசுத்த நீரில் வளர்த்தாலும், நோய் தாக்கலாம். நோய் தாக்கிய நன்கு வளர்ந்த இறால்களை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலாமல் போகிறது. பண்ணை உரிமையாளர்களுக்கு வருவாய் இழப்பும், அன்னிய செலாவணியாக ரூ.100 கோடி வரை இழப்பும் ஏற்பட்டுள்ளது," என்றார்.

## அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

நியூயார்க்: அமெரிக்காவில், பனிப்புயல் காரணமாக, 2,200 விமானங்கள், ரத்து செய்யப்பட்டன. அமெரிக்காவின் நியூயார்க் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் உள்ள பல மாகாணங்களில், நேற்று முன்தினம் முதல், கடும் பனிப்புயல் வீசி வருகிறது. நியூயார்க் நகரில், மைனஸ், 13 டிகிரி செல்சியசாக வானிலையில் பதிவாகி உள்ளது. இதனால், 10 20 செ.மீ., வரை பனிப்பொழிவும், மணிக்கு, 56 கி.மீ., வேகத்தில் பனிப்புயல் வீசும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த கடும் பனிப்புயல் காரணமாக, உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கு புறப்பட இருந்த, 2,200 விமானங்களின் சேவைகளை ரத்து செய்யப்பட்டது. அமெரிக்க அரசு முன்னெச்சரிக்கை ஏற்பாடாக, நியூயார்க் கவர்னர் ஆண்ட்ரு கியூமோ, அவசர கால தகவல் மையம் துவங்கி வைத்தார். மேலும், பொது மக்களை வெளியே வர வேண்டாம் எனவும், அமெரிக்க அரசு எச்சரித்து உள்ளது.

## அணை திறப்பை எதிர்பார்க்கும்பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள்

உடுமலை:பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தில், குறித்த நேரத்தில், திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்காவிட்டால், பல ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலைச்செடிகள் கருகும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.பி.ஏ.பி., திட்டத்தில், முதலாம் மண்டல பாசனத்தில், கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 95 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. திருமூர்த்தி அணையிலிருந்து நான்காம் மண்டல பாசனத்திற்கு, நான்கு சுற்றுகள் தண்ணீர் வழங்கப்பட்டு, பாசனம் நிறைவு பெற்றுள்ளது. தற்போது, பி.ஏ.பி., தொகுப்பு அணைகளிலிருந்து காண்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் பெறப்பட்டு, முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் இருப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், பாசனத்திற்கு, குறித்த நேரத்தில் தண்ணீர் திறக்காவிட்டால், பல ஆயிரம் ஏக்கரில், நிலக்கடலை செடிகள் கருகும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.முதலாம் மண்டல பாசனத்திற்குட்பட்ட தொண்டாமுத்தூர் கிளை வாய்க்கால் பகுதியில், உடுக்கம்பாளையம், சின்னபொம்மன்சாளை மற்றும் சுற்றுப்பகுதிகளில், பாசன தண்ணீரை எதிர்பார்த்து நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது.கடந்த மாதம் பெய்த மழையை அடிப்படையாக கொண்டு, நிலக்கடலை நடவு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டனர். சாகுபடியில் தற்போது, களை எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.பாசன சபை நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டத்தில், ஜன., 6 ல் முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். கோரிக்கை அடிப்படையில், தண்ணீர் திறக்கப்பட்டால் மட்டுமே நிலக்கடலை செடிகளை காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. உடுக்கம்பாளையம் பகுதி விவசாயிகள் கூறுகையில், முதலாம் மண்டல பாசனத்திற்கு திருமூர்த்தி அணையிலிருந்து ஜன., முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் நிலக்கடலை பயிரிட்டுள்ளோம்.விதைப்பு, பார்பிடித்தல், உழவு, களை எடுத்தல் உட்பட பணிகளுக்காக ஏக்கருக்கு 7 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டுள்ளோம்.

## மாவட்டத்தில் சராசரி அளவை விட மழை..குறைவு ...! நிலத்தடி நீர் மட்டம் குறைவதால் கவலை

கடலூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லாத நிலையில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களின் வடிகால் பகுதியாக அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. மொத்த நிலப்பரப்பில் 5 லட்சத்து 38 ஆயிரத்து 460 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.மாவட்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் பெய்யும் மழைநீர், பல்வேறு நதிகளாக பெருக்கெடுத்து கடலூர் மாவட்டத்தை செழிப்பாக்கி விட்டு, இறுதியில் வங்கக் கடலில் சங்கமிக்கிறது.இவ்வாறு பெருக்கெடுத்து வரும் மழை நீர் காரணமாக வீராணம், பெருமாள், வெலிங்டன், வாலாஜா உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளும் நிரம்பி, மாவட்டத்தில் நவரை, குறுவை, சம்பா ஆகிய முப்போக நெல் சாகுபடிக்கு கைகொடுத்து வந்தது. குறிப்பாக வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யும் மழையே மாவட்டத்தின் ஓராண்டின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வந்தது.மாவட்டத்தில் கடந்த 1984ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்தில் எடுத்த கணக்கின்படி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை 1,309 மி.மீ., ஆகும்.

அதில் குளிர் காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 36.8 மி.மீ., அளவும், கோடை காலமான மார்ச் முதல் மே வரையில் 71.9 மி.மீ., ஆகும்.
அதேப்போன்று தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான நான்கு மாதங்களில் 392.4 மி.மீ. அளவும், வடகிழக்கு பருவ மழைக்காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை 773.7 மி.மீ., மழை பெய்ய வேண்டும்.

ஆனால், கடந்த 2012ம் ஆண்டு சராசரியில் 54 சதவீதமான 713.2 மீ.மீ., அளவும், கடந்தாண்டில் சராசரியில் 75 சதவீதமான 990 மி.மீ., அளவே மழை பெய்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் கோடை காலத்திற்கான தண்ணீர் தேவையை ஈடுகொடுக்க வேண்டிய வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் மொத்த அளவில் 59.36 சதவீதமான 459.31 மி.மீ., அளவே மழை பெய்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யாததால், நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக குறைந்துள்ளது. இதனால், எதிர்வரும் குறுவை சாகுபடியை செய்ய முடியுமா என்ற கவலையில் விவசாயிகள் ஆழ்ந்துள்ளனர்.

## சம்பா நெல் அறுவடை பணிக்கு ஆட்கள்... பற்றாக்குறை 100 நாள் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்களா

விருத்தாசலம்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களை, சம்பா அறுவடைப் பணிக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் நேரடி நெல் விதைப்பு மற்றும் நடவு முறையில் சம்பா சாகுபடி அதிகளவில் செய்யப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக சம்பா சாகுபடி பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது.

கிராமங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்த கடந்த 2005ல் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம், வேளாண் மூலங்களான ஏரி, குளங்கள், பாசன வாய்கால்கள் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டன.

இதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு நூறு நாள் வேலையும், தினசரி 55 ரூபாய் கூலி வழங்கப்பட்டது. உயர்ந்து வரும் விலைவாசிக்கு ஏற்ப 80, 100, 119, 132, 148 ரூபாய் என படிப்படியாக உயர்த்தப்பட்டது.

தமிழகத்தில் இத்திட்டம் கடந்த 2006ம் ஆண்டு பிப்ரவரி 2ம் @ததி, முதல் கட்டமாக கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் துவக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2007 ஏப்ரல் 1ம் @ததி

முதல் தஞ்சாவூர், திருவாரூர், கரூர், திருநெல்வேலி மாவட்டங்களிலும், மூன்றாம் கட்டமாக 2008 ஏப்ரல் 1ம் @ததி முதல் மற்ற அனைத்து மாவட்டங்களிலும் துவங்கப்பட்டது. 2011-12ல் 119 ரூபாயும், 2012-13ல் 132 ரூபாயும், 2013-14ல் 148 ரூபாயும் வழங்கப்பட்டது.இப்பணி பெயரளவிற்கு மட்டுமே நடந்ததால் பாசன வாய்கால்கள், ஏரி, குளங்கள் புனரமைப்பு முழுமையடையவில்லை.

வேளாண் பணிகளும் பாதித்தன. கடந்த 2011ல் ஊரக வேலைத் திட்ட பணியாளர்களை வேளாண் பணிகளில் பயன்படுத்தலாம் என முதல்வர் ஜெ., அறிவித்தார். ஆனால் அதனை தீவிரமாக நடைமுறைப்படுத்தவில்லை.

ஆட்கள் பற்றாக்குறையால் சம்பா நடவுப் பணிகள் உரிய காலத்தில் முடியாமல், டிசம்பர் மாதம் வரை நீடித்தது. இதனால் பின் பட்டத்தில் நடவு செய்த பயிர்கள் தற்போது நிலவி வரும் வறட்சியால் பாதித்துள்ளன.

தற்போது, முன் பட்ட சம்பா அறுவடை பணி துவங்கியுள்ள நிலையில் ஆட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் சிரமம் அடைகின்றனர். எனவே, தேசிய ஊரக வேலைத் திட்டப் பணியாளர்களை, சம்பா நெல் அறுவடைப் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மகேந்திரன் கூறியதாவது: கடலூர் மாவட்டத்திலுள்ள 683 ஊராட்சிகளில் 1,529 குழுக்கள் உள்ளன. மாதத்திற்கு சராசரியாக 1 லட்சம் பணியாளர்கள் நூறுநாள் வேலையில் ஈடுபடுகின்றனர். அவர்களை, முந்திரி, மா, பலா கன்றுகள் நடுவது, பராமரித்தல் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விவசாயிகள் கேட்டுக்கொண்டால் அறுவடை பணிக்கும், வேளாண் துறையுடன் இணைந்து தேசியத் தோட்டக்கலை இயக்கத்திற்கு தேவையான கன்றுகளை நட்டுத் தரவும் தயாராக உள்ளோம். இதற்காக, விவசாயிகள் எந்த பங்களிப்பும் செலுத்தத் தேவையில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## நிலங்கள் வானம் பார்த்த பூமியாக மாறும்… சாத்தனூர் அணையில் தண்ணீர் இல்லை

திருக்கோவிலூர்,: விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் சாத்தனூர் அணையின் நீர் மட்டம் அபாய கட்டத்தில் இருப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதனால் 30 ஆயிரத்து 537 ஏக்கர் பரப்பிலான நிலங்கள் வானம் பார்த்த பூமியாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகளின் உயிர் நாடியாக இருந்து வருகிறது.இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதால் அணையின் நீர் இருப்பு 2,347 மில்லியன் கன அடியாக உள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடி. மண் தூர், அடிப்படை தேவை குடிநீர் திட்டங்களுக்காக 1,364 கனஅடிநீர் அணையில் எப்போதும் பராமரிக்கவேண்டும். மீதமுள்ள 983 மில்லியன் கன அடி நீர் மட்டுமே விவசாயத்திற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். கூட்டத்தில் முடிவு திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பாசனப் பரப்பிற்கு உரிமை நீராக 138 மில்லியன் கன அடியும், சாத்தனூர் இடது மற்றும் வலது புறக் கால்வாய் பாசன ஏரிகளுக்கு 845 மில்லியன் கன அடி நீரும் பகிர்ந்தளிக்க திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் பொதுப் பணித் துறை மூலம் முடிவு செய்யப்பட்டுள்ளது.இதனை விவசாயிகளின் கருத்தை கேட்டு எப்போது திறப்பது என பொதுப் பணித் துறை நிர்வாகம் முடிவு செய்யும். கேள்விக்குறிதிருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதிக்கு திறக்கப்படும் உரிமை நீர் 138 மில்லியன் கன அடி. தற்போதைய நிலையில் திறக்கப்பட்டால் தென்பெண்ணை ஆற்றில் இரண்டு நாட்களுக்கு கூட தண்ணீர் வராது. சாத்தனூர் அணையின் இடதுபுறக்கால்வாய் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் 6,355 ஏக்கர் நிலமும், வலதுபுறக் கால்வாய் மூலம் 19,182 ஏக்கர் நிலமும், திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பாசனத்தின் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும் விவசாயம் மேற்கொள்ளப்படும்.பருவ மழை பொய்த்து போனதால் 138 மி.க.அடி தண்ணீரை கொண்டு எந்த பயிரும் செய்ய முடியாது.

## காய்கறி சாகுபடியில்பட்டதாரி மாணவிகள்

விழுப்புரம் "பிடாகம் கிராமத்தில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டம் பெற்ற இரு மாணவிகள், பெற்றோருடன் இணைந்து சொட்டு நீர் பாசனத்தைப் பயன்படுத்தி காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

விழுப்புரம் அடுத்த பிடாகத்தை சேர்ந்தவர் விவசாயி அறிவழகன். இவரது முதல் மகள் சூர்யா. இவர் பொறியியல் கல்லூரியில், கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டம் பெற்றவர். இவரது சகோதரி சுப்ரியா. இவர் பி.சி.ஏ., படித்துள்ளார். கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ள இருவரும், வேலைக்காக வெளியில் செல்லாமல், தந்தையுடன் இணைந்து, விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து, அதில் 8063 என்ற ரக, வெண்டை விதைகளை மேட்டுபாத்தி அமைத்து வரிசை முறையில் நடவு செய்தனர். இதன் அருகிலுள்ள 70 சென்ட் இடத்தில், யு.எஸ்.816 ரக மிளகாய் செடிகளையும் நடவு செய்து பராமரித்து வருகின்றனர்.பத்தாம் வகுப்பு படித்து விட்டாலே, அரசு வேலைகளை தேடி அலையும் இந்த காலத்தில், கம்ப்யூட்டர் சயின்ஸ்சில் பட்டம் பெற்ற மாணவிகள், வயலில் இறங்கி, கிராமத்து பெண்களுடன் வேலை செய்வது அனைவரிடம் வரவேற்பை பெற்றுள்ளது.

## மரவள்ளி சாகுபடியில் லாபம்விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி :கள்ளக்குறிச்சி பகுதியில் மரவள்ளி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு இந்தாண்டு நல்ல லாபம் கிடைத்துள்ளதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயபாளையம், கல்வராயன்மலை உட்பட பல பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் குங்கும ரோஸ், முள்வாடி ரக மரவள்ளியை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

எதிர்பார்த்த மழை பெய் யாததால் பல இடங்களில் சொட்டு நீர் பாசனம் அமைத் தும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மரவள்ளி பயிரிட்டனர். கடந்த மாதம் ஒரு சில நாட்கள் பெய்த மழையால் மரவள்ளி பயிர்கள் செழிப்புடன் வளர்ந்து காணப்பட்டது.

மரவள்ளி சாகுபடி செய்த நிலங்களில் அறுவடை செய்யும் பணி தற்போது நடக்கிறது. ஒரு ஏக்கர் மரவள்ளி பயிரிட ரூ.5,000 உற்பத்தி, பராமரிப்பு செலவு ஏற்பட்டுள்ளது. தற்போது ஏக்கருக்கு 220 மூட்டைகள் வரை கிழங்குகள் கிடைத் துள்ளது.

77 கிலோ கொண்ட ஒரு மூட்டை 840 ரூபாய்க்கு விற்கின்றனர். ஜவ்வரிசி, மாவு, அப்பளம் உள்ளிட்ட பல வகை தயாரிப்புக்கு ஆத்தூர், சேலம் உட்பட பல பகுதிகளில் உள்ள மில் நிறுவனங்கள் கள்ளக் குறிச்சி பகுதி விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்கின்றன. மரவள்ளி பயிரிட்ட விவசாயி களுக்கு இந்தாண்டு இரட்டிப்பு லாபம் கிடைத்துள்ளதால் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பருத்தி மகசூல் குறைந்ததாக விவசாயிகள்... காலம் தவறிய மழையால் பயனில்லை

கள்ளக்குறிச்சி,: கள்ளக்குறிச்சி பகுதியில் காலம் தவறி பெய்த மழையால் பயனில்லாமல் பருத்தி மகசூல் முற்றிலும் குறைந்துள்ளதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

தமிழகத்தில் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. கள்ளக்குறிச்சியில் ஆண்டு தோறும் பருத்தி வார சந்தை நடப்பதால் இரவை மற்றும் மானாவாரி நிலங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. பத்து மாத பயிரான பருத்தி சாகுபடியில் பூ விடும் முன்பாக பெய்யும் மழை நல்ல மகசூல் கிடைக்க வழிவகுத்து வந்தது. இதே போல் இந்தாண்டும் விவசாயிகள் எதிர்பார்த்து பருத்தி சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டினர்.

மகசூல் குறைவு

விவசாயிகள் எதிர்பார்த்த நேரங் களில் பருவ மழை பெய்யவில்லை. காலம் தவறி சில நாட்கள் பெய்த மழையால் செடிகளிலிருந்து காய்கள் கொட்டியது. இதனால் பருத்தி மகசூல்(காய்) முற்றிலும் குறைந்தது. கடந்த ஆண்டு ஏக்கருக்கு 12 குவிண்டால் வரை பருத்தி கிடைத்து. காலம் தவறிய மழையால் மூன்று ஏக்கருக்கு 8 குவிண்டால் பஞ்சு மட்டும் கிடைப்பதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.

வீரிய ரக ஒட்டு பருத்தி

இப்பகுதியில் வீரிய ரக ஒட்டு பருத்தி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பெண் செடியின் பூவிலிருந்து விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக விவசாயிகள் ஒரு ஏக்கர் நிலத்தில் 90 சென்ட் நிலத்தில் பெண் பருத்தியும், 10 சென்ட் நிலத்தில் ஆண் பருத்தியும் பயிர் செய்கின்றனர்.

வீரிய ஒட்டு ரக பருத்தி விதைகள் ஆண் செடியின் மகரந்தத்தை எடுத்து பெண் செடியின் சூலில் நேரடியாக சேர்க்கும் போது வீரிய ஒட்டு ரக பருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. மழை பிரச்னையால் வீரிய ரக ஒட்டு பருத்தி சாகுபடி செய்த விவசாயிகளுக்கும் மகசூல் குறைவாக கிடைக்கிறது.

பருத்தி வாரச் சந்தை

பருத்தி சாகுபடி நிலங்களில் அறுவடை செய்யப்படுகின்றன. இதனையொட்டி கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வார சந்தை துவக்கப்பட்டது. இங்கு பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், வியாபாரிகள் வந்து செல்வதால் ஆண்டு தோறும் கோடி கணக்கான ரூபாய் மதிப்பில் வர்த்தகம் நடந்து வருகிறது.

ஆண்டுதோறும் எல்.ஆர்.ஏ.,- சுவீன் பஞ்சு ரகம் விற்பனைக்கு கொண்டு வரப்படும். இந்தாண்டு சுவீன் பஞ்சு ரகம் வரத்து குறைவாகவே உள்ளது. ஒரு குவிண்டால் எல்.ஆர்.ஏ., பஞ்சு ரகம் அதிகபட்சம் ரூ.4,620, குறைந்தபட்சம் ரூ.4,319 என விலை போகிறது. இந்தாண்டு விற்பனை இலக்காக 16 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஆண்டுதோறும் விற்பனை இலக்கை விட கூடுதலாக பல கோடி ரூபாய் வர்த்தகம் நடந்த நிலையில், நிர்ணயித்த இலக்கை அடைய முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. வழக்கம் போல் நல்ல லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து பருத்தி சாகுபடி öŒ#த விவசாயிகளுக்கு காலம் தவறி சில நாட்கள் பெய்த மழையினால் பருத்தி மகசூல் முற்றிலும் குறைந்து பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தியதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவை தேயிலை மையத்தில் ரூ.4.29 கோடிக்கு தேயிலை விற்பனை



கோவை : தென்னிந்தியாவில் குன்னூர், கோவை, கொச்சியில் தேயிலை ஏல மையம் உள்ளது. கோவையில் வெள்ளிக்கிழமை தோறும் ஏலம் நடக்கிறது. இந்த ஆண்டின் முதல் ஏலம் நேற்று நடந்தது. இதில் டஸ்ட் ரகம் 3.73 லட்சம் கிலோவும், லீப் ரகம் 2.10 லட்சம் கிலோவும் என மொத்தம் 5.83 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது.இதில் டஸ்ட் ரகத்தில் 3.40 லட்சம் கிலோவும், லீப் ரகத்தில் 1.79 லட்சம் கிலோவும் என மொத்தம் 5.19 லட்சம் கிலோ விற்பனையானது. இதன் சராசரி விற்பனை மதிப்பு ரூ.4.29 கோடி.இது சராசரி விற்பனை தொகையை விட ஒரு மடங்கு அதிகமாகும். கடந்த ஆண்டில் கடைசியாக நடந்த ஏலத்தில் விற்ற விலையை விட, இந்த வாரம் நடந்த ஏலத்தில் டஸ்ட் ரகம் கிலோவிற்கு ரூ.2ம், லீப் ரகம் ரூ.3ம் விலை உயர்ந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கோவை ஏல மையத்தில் தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸை முன்னிட்டு விடுமுறை அளிக்கப்படுகிறது. இதனால், கடந்த வாரம் கிறிஸ்துமஸையொட்டி ஏலம் நடக்கவில்லை. கடந்த வாரம் விற்பனையாகாமல்

இருப்பு வைக்கப்பட்ட தேயிலைத்தூளின் ஒரு பகுதி இந்த வாரம் கூடுதலாக விற்பனையாகியுள்ளது.நீலகிரி, வால்பாறை, மூணாறு பகுதி தேயிலை தோட்டங்களில் நிலவும் கடும் குளிர் காரணமாக பசுந்தேயிலை மகசூல் குறைந்து வருகிறது. இதனால், தேயிலைத்தூளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. விலை தொடர்ந்து உயரும் வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு முதல் ஏலத்தோடு இந்த ஆண்டின் முதல் ஏலத்தை ஒப்பிட்டால் விற்பனை சதவீதம் டஸ்ட் ரகத்தில் ஒரு சதவீதமும், லீப் ரகத்தில் 10 சதவீதமும் குறைந்துள்ளது. அதே போல் விற்பனை விலையில் டஸ்ட் ரகத்தில் ரூ.15ம், லீப் ரகத்தில் ரூ.21ம் குறைந்துள்ளது.நீலகிரி மாவட்டம் குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் கடந்த 2013ம் ஆண்டில் 51 முறை தேயிலை ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 5.95 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனையானது. தேயிலை தூளின் சராசரி விலை கிலோ ஒன்றுக்கு ^89.32 பைசாவாக இருந்தது. இதன் மூலம் ரூ.531 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

கடந்த 2012ம் ஆண்டில் மொத்தம் 5.53 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இதில் ஒரு கிலோ தேயிலை தூளுக்கு சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.82.28 பைசா கிடைத்தது. இதன்மூலம் ரூ.455.01 கோடி வருவாய் கிடைத்தது.இந்த 2 ஆண்டை ஒப்பிட்டு பார்க்கும் போது கடந்தாண்டு ரூ.76.44 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் கடந்தாண்டு கூடுதலாக தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டதுடன் அதன் விலையும் உயர்ந்தது தான்.

**வாழை இலை விலை குறையவில்லை 15 நாளாக ஒரு இலை ரூ.35 மலை காய்கறிகள் விலை சரிவு**

கோவை, :கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் வாழை இலை குறைந்தபட்ச விலை ரூ.3க்கும், அதிகபட்ச விலை ரூ.3க்கும் விற்றது. மார்கழி மாதம் துவங்கியதை தொடர்ந்து கோயில்களில் அதிகாலை சிறப்பு பூஜை, அய்யப்ப பூஜை, திருமணமுகூர்த்தம் ஆகியவை காரணமாக வாழை இலையின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் வாழை இலைக்கு கிராக்கி ஏற்பட்டு அதன் விலை உயர்ந்துள்ளது. கடந்த 14ம் தேதி முதல் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் குறைந்தபட்ச விலை ரூ.10க்கும், அதிகபட்ச விலை ரூ.35க்கும் உயர்ந்துள்ளது. உழவர் சந்தையை விட விலை அதிகமாக விற்கப்படும் சில்லரை விற்பனை கடைகளில் இலையின் விலை ஒன்று குறைந்தபட்ச விலை ரூ.15க்கும், அதிகபட்ச விலை ரூ.35க்கும் விற்கப்படுகிறது. மார்கழி பூஜையை முன்னிட்டு வாழை பழங்களின் விலையும் 15 நாட்களாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.38க்கு விற்ற ரஸ்தாளி ரூ.48க்கு விற்கிறது. விலை சரிவடையும் காய்கறிகள்: நீலகிரியிலிருந்து ஊட்டி, முட்டைகோஸ், காரட், பட்டாணி உள்ளிட்ட மலை காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை குறைந்து வருகிறது. 15 நாட்களுக்கு முன்பு ரூ.30 முதல் ரூ.46 வரை விற்ற காரட் நேற்று ரூ.5 முதல் ரூ.36 ஆக குறைந்தது. அதே போல் ரூ.80க்கு விற்ற பட்டாணி ரூ.43க்கு குறைந்துள்ளது. ரூ.30 முதல் ரூ.70க்கு விற்ற பச்சை மொச்சை ரூ.10 முதல் ரூ.34ஆக குறைந்துள்ளது. இது தவிர தக்காளி தொடர்ந்து சரிந்த நிலையிலேயே உள்ளது. நாட்டு தக்காளி ஒரு கிலோ குறைந்தபட்ச விலை ரூ3க்கும் அதிகபட்ச விலை ரூ.7க்கும், ஆப்பிள் தக்காளி குறைந்தபட்ச விலை ரூ.3க்கும், அதிகபட்ச விலை ரூ.10க்கும் விற்கிறது. சின்னவெங்காயம் குறைந்தபட்ச விலை ரூ.10 முதல் ரூ.38 வரையும், பெரிய வெங்காயம் ரூ.5 முதல் ரூ.33 வரையும் விற்கிறது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 64 அடியானது**



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெகுவாக சரிந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 1,026 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 1,014 கனஅடியாக சரிந்தது. அப்போது, அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 9,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணைக்கு வரும் நீரின் அளவை விட திறப்பு அதிகளவில் உள்ளதால் அணையின் நீர்மட்டம் தினசரி சுமார் ஒரு அடி வீதம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 65.82 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 64.95 அடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு 28.51 டி.எம்.சி.

**கொள்முதல் வரி செலுத்தாத அரிசி ஆலைகள் மீது நடவடிக்கை**

திண்டிவனம், : திண்டிவனத்தில் 100க்கும் மேற்பட்ட ரைஸ் மில்கள், அரிசி மண்டிகள் செயல் பட்டு வருகிறது. வரி செலுத்தாதவர்கள் மீது நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது குறித்து திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் செந்தில் முருகன் நிருபர்களிடம் கூறுகையில், தமிழ்நாடு விவசாய விளைபொருட்கள் விற்பனை சட்டத்தின் கீழ் நெல், மணிலா, உளுந்து, கம்பு, ராகி, வரகு, பருத்தி, எள் ஆகியவற்றின் கொள்முதல், விற்பனை, இருப்பு குறித்த விவர பதிவேடுகளை ரைஸ்மில் உரிமையாளர்கள் மற்றும் அரிசி மற்றும் நெல் வியாபாரிகள் மாதம் ஒருமுறை அரசு விற்பனை கூடத்தில் காண்பிக்க வேண்டும். ஆனால் திண்டிவனம் பகுதியில் 100க்கும் மேற்பட்ட ரைஸ் மில்களில்

கணக்குகளை காட்டாமல் இருக்கின்றனர்.

அவர்கள் கொள்முதல் செய்யும் தொகையில் அரசுக்கு ஒரு சதவீதம் வரி செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாத காரணத்தினால் அரசுக்கு கோடி கணக்கில் இழப்பு ஏற்படுகிறது. இதே நிலைமை கடந்த 4 ஆண்டுகளாக நீடிக்கிறது. இதனால் விளைச்சல் குறித்து அரசுக்கு சரியான புள்ளி விவரமும் அளிக்க முடியவில்லை. தற்போது கணக்கு காட்டாத ரைஸ் மில்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அதற்கு முன்பாக அவர்களுக்கு நோட்டீஸ் வினி யோகம் செய்யப்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த நான்கு வருடத்தில் ரூ.20 கோடிக்கு மேல் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது.

**வெற்றிலை விலை வீழ்ச்சி; விவசாயிகள் வேதனை**

செம்பட்டி, : வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், வக்கம்பட்டி, அய்யம்பாளையம், ரெட்டியார்சத்திரம், வத்தலக்குண்டு, பட்டிவீரன்பட்டி, சித்தையன்கோட்டை, பஞ்சம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வருடம் முழுவதும் வெற்றிலை விவசாயம் நடைபெறுவது வழக்கம். நடவு செய்த ஒரு வருடம் கழித்துதான் வெற்றிலை கொடியில் இலைகளை விற்பனைக்கு கிள்ள முடியும்.

வெற்றிலை கொடிகளுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிலை விலையும் வீழ்ச்சி அடைந்து வருவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். கரூர் பகுதிகளில் விளைந்த வெற்றிலைகள் தற்போது திண்டுக்கல் பகுதிக்கு விற்பனைக்கு வந்துள்ளன. இதனால் திண்டுக்கல் மாவட்ட வெற்றிலைக்கு மவுசு குறைந்து வருகிறது. தற்போது மார்க்கெட்டில் வெற்றிலை ஒரு கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது.

இதுகுறித்து பஞ்சம்பட்டி பகுதி விவசாயிகள் கூறுகையில், `கடந்த 30 வருடங்களாக இப்பகுதியில் வெற்றிலை பயிரிட்டு வருகிறோம். கடந்த 2

வருடங்களாக வெற்றிலைக் கொடிகள் சுருட்டைப்புழு தாக்குதல் மற்றும் கருகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், கரூர் பகுதியிலிருந்து வெற்றிலைகள் அதிகளவில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருவதால், இங்கு விளையும் வெற்றிலைகளுக்கு போதிய விலை கிடைப்பதில்லை. தமிழகத்தில் கும்பகோணத்திற்கு அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டத்தில் பயிரிடப்படும் நாட்டுக்கொடி, சின்னக்காம்பு வெற்றிலைக்கு தனி மவுசு உண்டு. இவ்வகை வெற்றிலையைத்தான் ஜீரண சக்திக்காக பயன்படுத்துவர். வெற்றிலை ஒரு கிலோ நூறு ரூபாய்க்குமேல் விற்றால்தான் ஓரளவு லாபம் கிடைக்கும் என்றனர்.

**கோமாரி நோய் தடுக்கும் முறைகள் வேளாண் விஞ்ஞானிகள் விளக்கம்**

காரைக்குடி, : கோமாரிநோயின் அறிகுறிகள் மற் றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்து குன்றக் குடி வேளாண் அறிவியல் விஞ்ஞானிகள் தெரிவித்து ள்ளனர். இது குறித்து அவர் கள் தெரிவிக்கையில்.

கோமாரி நோயால் அனைத்து வயது, இன மாடுகள், பன்றிகள் அதிக பாதிப்புக்குள்ளாகி விவசாயிகளுக்கு அதிக பொருளா தார சேதத்தை ஏற்படுத்துகின்றன. அதிலும் கலப்பின மாடுகளே இந்நோய்க்கு அதிக அளவு பாதிக்கப்படுகின்றன. ஆடுகளில் செம் மறி ஆடுகளைவிட வெள்ளாடுகளையே இந்நோய் அதிகமாக தாக்குகின்றன.

ஆப்தா என்ற வைரஸி னால் ஏற்படும் இந்நோயி னால் பாதிக்கப்பட்ட மாடு களை நேரடியாக தொடுவ தன் மூலமாகவும், பாதிக்கப்பட்ட தண்ணீர், வைக் கோல், புற்கள், பண்ணைப் பணியாளர்கள் மூலம் ஒரு மாட்டிலிருந்து மற்ற மாட்டி ற்கு பரவுகிறது. தவிர காற் றின் மூலமும் இந்நோய் கா ல்நடைகளுக்கு பரவுகிறது. இந்நோய் பாதிப்புக்குள் ளான மாடுகளின் உட லின் வெப்பநிலை மிகவும் உயர் ந்து காணப்படும். வாயின் உட்புறங்களில் கொப்பளங் கள் காணப்படும். பின் கொப்பளங்கள் உடைவ தால் மாடுகள் உண்ண முடி யாமல் எடை குறைய ஆரம்பித்து அதிகளவு உமிழ்நீர் ஒழுகிக் கொண்டே இருக்கும். சினை மாடுகளுக்கு கருச்சிதைவு கூட ஏற்படும். பால் மாடுக ளில் பால் சுரத் தல் குறையும் அல்லது நின்று விடும். இந் நோயினால் இத யம், வயிறு மற்றும் கணநீர் சுரப்பிகளும் பாதிப்படைகின்றன.

இந் நோய்க்கென தனிப்பட்ட முறையில் மருந்து எதுவும் கிடையாது. நோயி னால் பாதிக்கப்பட்ட மாட் டின் வாயினை 1 சதவீதம் பொட்டாசியம் பெர்மாங்க னேட் கொண்டு நன்றாக கழவி விடலாம். புண்களில் புண்களில் போரிக் அமிலம் கிளிசரின் கலவையை தடவி விட வேண்டும்.

குளம்புகளுக்கு  இடை யே வேப்ப எண்ணெயை தடவும் போது புண்களில் புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் வகையில் 5 பங்கு நிலக்கரியையும், ஒரு பங்கு தாமிர சல்பேட் பவுடரை சேர்த்து கலக்கிய கலவை யைக் குளம்புகளுக்கு இடை யில் தடவ வேண்டும்.

கன்றுகளுக்கு 6 மாத இடைவெளியில் இரண்டு தடுப்பூசியும், ஒரு வயதிற்கு மேல் ஆண்டு தோறும் தடு ப்பூசியும் போட வேண்டும். தடுப்பூசி போட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டாலும் சில நாட்களுக்கு பிறகு தானாக சரியாகிவிடும் என தெரிவித்தனர்.

**பருவ மழை சரிவர பெய்யவில்லை விவசாயப் பணி சுணக்கம் கவலையில் விவசாயிகள்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் போதிய பருவ மழை இல்லாததால் விவசாயப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள தென் மாவட்டங்களில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சமூக பொருளாதார அமைப்பு விவசாயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதனால் விவசாயம் மட்டுமே பிரதானத் தொழிலாக இதுவரை இருந்து வருகிறது. மாவட்டத்தின் மொத்த விவசாயப் பரப்பு 1.40 லட்சம் ஹெக்டேர் என கண்டறியப்பட்டுள்ளது. அதில் 11 ஆயிரத்து 200 ஹெக்டேர் காவிரி பாசனப்பகுதி உள்பட 96 ஹெக்டேர் பரப்பளவு நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், 90 சத விவசாய நிலங்கள் நீர் ஆதாரத்துக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் மழை மற்றும் நிலத்தடி நீரை மட்டுமே நம்பி இருக்கிறது. மாவட்டத்தில் ஏறத்தாழ 6 ஆயிரம் கண்மாய்கள் உள்ள நிலையில், இவற்றிலிருந்து கிடைக்கும் நீர் ஆதாரமே மாவட்டத்தின் விவசாயத்துக்கு

அடிப்படையாகத் திகழ்கிறது. அவற்றில் மிகப்பெரிய கண்மாய்களாக புதுக்கோட்டை கவிநாடு கண்மாய், ஆலங்குடி வல்லநாடு கண்மாய் ஆகிய 2 கண்மாய்கள் அமைந்துள்ளன. மேலும், வெள்ளாறு, குண்டாறு, பாம்பாறு, அம்புலியாறு, கோரையாறு, சூறையாறு உள்ளிட்ட காட்டாறுகளும் ஆதாரமாக உள்ளன. இருந்தாலும் வறட்சியை சந்திக்கும் மாவட்டமாகவே இருந்து வருகிறது. தொண்டைமான் மன்னர்கள் ஆட்சி காலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தின் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் காவிரி நீரை கொண்டுவர திட்டமிட்டனர். ஆனால், என்ன காரணத்தினாலோ அத்திட்டம் நிறைவேறாமல் போனது. நாடு விடுதலை அடைந்தபின இந்திய அரசுடன் 1948ல் புதுக்கோட்டை சமஸ்தானம் இணைக்கப்பட்டது முதலே, காவிரி நீரை இம்மாவட்டத்துக்கு கொண்டு வரவேண்டுமென வலியுறுத்தி இடதுசாரிகள் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள், விவசாய சங்கங்கள் இன்று வரை போராடி வருகின்றன.

விடிவு பிறக்கவில்லை. இதனால், விவசாயப் பணிகள் உத்தரவாதமில்லாத நிலைக்கு தள்ளப்பட்டு மழையை மட்டுமே நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டது. இந்த சூழ்நிலையில் தற்போதும் பருவ மழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் விவசாயப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டதையடுத்து விவசாயிகளை கவலைகளும் சூழ்ந்துகொண்டது.

ஜல்லிக்கட்டுக்கு கட்டுப்பாடு...

தைமாதம் பிறந்து விட்டாலே தமிழகமெங்கும் விழா களைகட்டும். ஆனால், இந்த தை மாதத்தை தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் எதிர்பார்த்து வந்த நிலைபோய் ஏன்தான் இந்த தைமாதம் வருகிறோதோ என்ற நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. இது ஒரு புறம் இருக்க விவசாயிகளுக்கும் கிராம மக்களுக்கும் சற்று ஆறுதல் தரக்கூடிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்துவதற்கும் பிராணிகள் நல வாரியமும், நீதிமன்றமும் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் பெரும்பாலான கிராமங்களில் ஜல்லிக்கட்டு எனும் வீர விளையாட்டும் முக்கியத்துவம் பெறவில்லை.

**147 நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

கடலூர், : கடலூர் மாவட்டத்தில் பொங்கல் அறுவடைக்கு முன்னதாக 147 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கடலூர் மண்டலம் சிதம்பரம் வட்டத்தில் அகர ஆலம்பாடி, சி.ஆலம்பாடி, அம்பாள்புரம், அருண்மொழிதேவன், ஆதிவராகநத்தம், எறும்பூர், கண்ணன்குடி, கரைமேடு, காட்டுக்கூடலூர், கீரப்பாளையம், கிள்ளை, பி.முட்லூர், சி.முட்லூர், நாஞ்சலூர், டி.நெடுஞ்சேரி, சாத்தப்பாடி, செங்கல்மேடு, சேத்தியாதோப்புகுறுக்குரோடு, சிவபுரி, தண்டேஸ்வரநல்லூர், துணிசிரமேடு, உசுப்பூர், வடதலைக்குளம், வளையமாதேவி, வல்லம்படுகை, வாழக்கொல்லை, வீரமுடையான்நத்தம், விளாகம், புதுச்சத்திரம் உள்பட 50 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது.

காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் ஆனந்தகுடி, எடையார், எள்ளேரி, எய்யலூர், கண்டமங்கலம், கஞ்சன்கொல்லை, காட்டுமன்னார்கோவில், கீழ்கடம்பூர், மா.உடையூர், மேலக்கடம்பூர், மோவூர், ஓமாம்புலியூர், ரெட்டியூர், சிறுகாட்டூர், தில்லைநாயகபுரம், குணவாசல், திருநாரையூர், வாண்டையார்இருப்பு, குமராட்சி, அம்புஜவல்லிபேட்டை, ஆயங்குடி, லால்பேட்டை, கள்ளிப்பாடி, ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீநெடுஞ்சேரி, முட்டம், குச்சூர், மதகளிர்மாணிக்கம், அத்திப்பட்டு, நாச்சியார்பேட்டை உள்பட 51 இடங்களில் திறக்கப்பட உள்ளது.

கடலூர் வட்டத்தில் தூக்கணாம்பாக்கம், களையூர், சி.என்.பாளையத்திலும், பண்ருட்டி வட்டத்தில் புலவனூர், பைத்தாம்பாடி, வீரபெரு மாநல்லூரிலும், குறிஞ்சிப்பாடி வட்டத்தில் ஆடூர்அகரம், வரதராஜன்பேட்டை, குறிஞ்சிப்பாடி, கருவேப்பம்பாடி, குண்டியமல்லூர், கொளக் குடி, புதுரங்காநாத புரத்திலும், விருத்தாசலம் வட்டத்தில் சி.கீரனூர், காவனூர், மேலப்பாளையம், ராஜேந்திரப்பட்டினம், கொடுமானூர், கோபாலபுரத்திலும், கருவேப்பிலங்குறிச்சி உள்பட 16 இடங்களிலும் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

திட்டக்குடி வட்டத்தில் கிளிமங்கலம், டி. இளமங்கலம், சாத்தநத்தம், கொட்டாரம், தாழநல்லூர், தொளார், மருதத்தூர், சிறுமுளை, வையங்குடி, கோடங்குடி,

கீழக்கல்பூண்டி, சிறுபாக்கம், தொழுதூர், பெண்ணாடம் உள்பட 17 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

கிரேடு 'ஏ' நெல் ரூ.1345 உடன் ஊக்கத்தொகை ரூ.50 சேர்த்து ரூ.1415க்கும், பொது ரக நெல் ரூ.1310 உடன் ஊக்கத்தொகை ரூ.50 சேர்த்து ரூ.1360க்கும் கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொள் முதல் செய்யப்படும் நெல் அளவு 50 கிலோ. சாக்குகளில் நிகர எடை 40 கிலோவுடன் சாக்கு எடை 0.665 கிராமுடன் சேர்த்து மொத்த எடையாக 50 கிலோ 665 கிராம் இருக்க வேண்டும். கொள்முதல் செய்யப்படும் நெல்லில், அதிகபட்சமாக கனிமபொருட்களும், கரிமபொருட்களும் ஒரு சதவீதமும் சேதமடைந்தது, நிறம்மாறியது, முளைகண்டது, பூச்சிதுளைத்தது என அதிகபட்சமாக 4 சதவீதமும் முதிராதது, சுருங்கியது மற்றும் மடிப்பு விழுந்த தானியங்கள் அதிகபட்சமாக 3 சதவீதமும், கீழ்நிலைக்கலவை 6 சதவீதத்திற்குள்ளும், ஈரப்பதம் அதிகபட்சமாக 17 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

**மரக்கன்றுகள் நடும் பணி: விவசாயிகள் ஆர்வம்**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும்பாலானோர் உர விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை காரணமாக மரக்கன்றுகள் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த பகுதியில் ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் நெற்பயிர், மணிலா, ஆகிய பயிர்களை செய்வதை தவிர்த்துவிட்டு சவுக்கு, தைல மரங்களை பயிர் செய்யும் பணியில் தீவிரமாக உள்ளனர். மரக்கன்றுகளை நடவு செய்துவிட்டு ஒரு முறை களைகளை நீக்கிவிட்டு தண்ணீர் பாய்ச்சினால் நன்றாக வளர்கிறது. இதை கருத்தில் கொண்டு பெரும்பாலான விவசாயிகள் நன்செய், புன்செய் நிலங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து வருகின்றனர். குறிப்பிட்ட ஆண்டு இடைவெளியில் மொத்தமாக விற்பனை செய்து நல்ல லாபம் கிடைப்பதால் ஆர்வத்துடன் உள்ளனர். வீராணந்தபுரம், வெங்கடேசபுரம், பழஞ்சநல்லூர், பட்டிக்கொல்லை, மேலும் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் சாகுபடி மிக தீவிரமாக உள்ளது.

**பாசனத்துக்கு உரிய தண்ணீர் திறக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு : கொள்ளிடம் விவசாயிகள் முடிவு**

கொள்ளிடம், : நாகை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றிய விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் அவசரக்கூட்டம், ஆச்சாள்புரத்தில் நேற்று நடைபெற்றது. ஒன்றிய தலைவர் சிவப்பிரகாசம்பிள்ளை தலை மை வகித்தார். செயலாளர் விஸ்வநாதன் வரவேற்றார். ஆச்சாள்புரம் பாசனதாரர் சங்க தலைவர் கனகசபை, கணேசமூர்த்தி ஆகியோர் முன் னிலை வகித்தனர். கீழணை பாசன சங்க தலைவர் கண்ணன் பேசினார்.

கூட்டத்தில், மேட்டூரிலிருந்து கல்லணைக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவில், கல்லணையிலிருந்து, கீழணை பாசனத்தின் கட்டுப்பாட் டில் உள்ள 1 லட்சத்து 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு 10 சதவிகிதம் தண்ணீர் திறந்து விட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்கினை, கொள்ளிடம் பகுதியில் உள்ள தெற்குராஜன் வாய்க்காலில் திறந்து விட வேண்டும். ஆனால் இதுவரை உரிய நீரை திறந்து விடவில்லை. இதனால், சம்பா பயிர் கருகிக் கொண்டிருக்கிறது. எனவே உரிய நீரை திறந்து விடக்கோரி, ஒருவாரத்திற்குள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கொள்ளி டம் ஒன்றியத்தைச்சேர்ந்த விவசாய பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்ட னர். ஒன்றிய பொருளா ளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

**அதிக மகசூல் பெற நடவு முறையில் துவரை சாகுபடி விவசாயிகளுக்கு யோசனை**

பட்டுக்கோட்டை, : நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கை: பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 125 ஏக்கரில் நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம். நடவு முறை துவரை சாகுபடியில் முத லில் பருவகாலத்திற்கு ஏற்ப ரகம் தேர்வு செய்ய வேண் டும்.

உதாரணமாக ஆடிப்பட்டத்திற்கு 180 நாட்கள் வயதுடைய கோ.6 ரகம் விதைக்கலாம். புரட்டாசி பட்டம் 130 நாட்கள் வயதுடைய கோ.ஆர்.ஜி.7 ரகம் விதைக்கலாம். ஒரு ஏக்கருக்கு 1 கிலோ வீதம் 2 சதம் கால்சியம் குளோரைடு கொண்டு விதையை கடின படுத்த வேண்டும். மேலும் விதை நேர்த்தி செய்வதற்கு ட்ரைக்கோடெர்மாவிரிடி பயன்படுத்தலாம்.

குழித்தட்டு முறையில் விதைப்பு செய்த 25- 30 நாட்கள் வயதுடைய நாற்று களை 5 இன்ட் 2 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 30 மற்றும் 45 நாட்களில் நுனி கிள்ளுதல் முறையை பின்பற்றுவதால் பக்க கிளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஏக்கருக்கு 2 சதம் டி.ஏ.பி கரைசல் தெளிப்பதன் மூலம் பூக்கள் உதிர்வதை குறைக்கலாம்.

முக்கிய காலகட்டங்களான பூ பூக்கும் தருணம் மற்றும் காய் பிடிக்கும் தருணத்திலும் நீர்பாய்ச்சுதல் அவசியம். காய்ப்புழு இருந் தால் ஏக்கருக்கு 130 மி.லி இண்டாக்சிகார்ப் தெளிப்பதன் மூலம் காய்புழுவை கட்டுப்படுத்தலாம். மேற் கண்ட தொழில்நுட்பங் களை பயன்படுத்தி நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 1,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

வேளாண்மைத்துறையில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானியம் அல்லது எக்டேருக்கு ரூ.7,500 மானிய திட்டத்தை பயன்படுத்தி கொள்ளலாம்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை முதல் தென் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு**




சென்னை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இந்த வருடம் பொய்த்துவிட்டது. அதன் காரணமாக விவசாயிகளும், பொதுமக்களும் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. அதன் காரணமாக நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கடலோரப்பகுதிகளில் மழை பெய்யும். சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**விலை குறைந்துள்ள நிலையிலும் காபி ஏற்றுமதி 3 சதவீதம் உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி இந்தியாவின் காபி ஏற்றுமதி 2013–ஆம் ஆண்டில் 3 சதவீதம் அதிகரித்து 3.14 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2012–ஆம் ஆண்டில் 3.05 லட்சம் டன்னாக இருந்தது.

<u>மறு ஏற்றுமதி</u>

சர்வதேச அளவில் விலை குறைவாக இருந்தாலும், மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் குறிப்பாக உடனடி காபியின் மறு ஏற்றுமதி அதிகரித்ததே காபி ஏற்றுமதி அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என காபி வாரியம் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் சென்ற ஆண்டில் அராபிகா மற்றும் ரோபஸ்டா காபி ரகங்களின் விலை 30 சதவீதம் குறைந்தது. இதனையடுத்து அராபிகா காபி ஏற்றுமதி 5 சதவீதம் குறைந்து 57,792 டன்னிலிருந்து 55,082 டன்னாக சரிவடைந்துள்ளது. அதேசமயம், ரோபஸ்டா ரக காபி ஏற்றுமதி 6 சதவீதம் உயர்ந்து 1,55,890 டன்னிலிருந்து 1,65,087 டன்னாக அதிகரித்துள்ளது.

எனவே, ஏற்றுமதியாளர்கள் மதிப்பு கூட்டப்பட்ட காபி ஏற்றுமதியில் கவனம் செலுத்தினர். இதனையடுத்து உடனடி காபி மறு ஏற்றுமதி 56 சதவீதம் அதிகரித்து 44,457 டன்னிலிருந்து 70,833 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக காபி

மறு ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் ரூ.4,728.86 கோடியாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய ஆண்டில் ரூ.4,637.87 கோடியாக இருந்தது.

சென்ற ஆண்டில் நம் நாட்டிலிருந்து இத்தாலி (77,041 டன்) அதிக அளவு காபி இறக்குமதி செய்துள்ளது. ஜெர்மனி (30,571 டன்), ரஷ்யா (20,703 டன்) மற்றும் பெல்ஜியம் (17,431 டன்) ஆகிய நாடுகளும் இறக்குமதி செய்துள்ளன.

அறுவடை

இந்தியாவில் தற்போது காபி அறுவடை நடைபெற்று வருகிறது. அராபிகா அறுவடை ஏறக்குறைய நிறைவடைந்துள்ளது. ரோபஸ்டா அறுவடை மார்ச் மாதத்தில் நிறைவடைய உள்ளது. நடப்பு 2013–14 காபி பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) காபி உற்பத்தி 3.47 லட்சம் டன்னாக இருக்கும் என காபி வாரியம் மதிப்பிட்டுள்ளது.

**கால்நடை சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டன ஆடு-மாடுகள் விற்பனை விறுவிறுப்பு**



தடை நீக்கம் செய்யப்பட்ட பின், ஊத்தங்கரை கால்நடை சந்தை மீண்டும் கூடியதை படத்தில் காணலாம்.

கிருஷ்ணகிரி,

கோமாரி நோயை கட்டுப் படுத்த விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப் பட்டதை அடுத்து கிருஷ்ணகிரி மாவட்டத் தில் உள்ள கால்நடை சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 2 மாதங் களுக்கு பிறகு சந்தை கூடியதால் ஆடு-மாடு களின் விற்பனை விறு விறுப்பாக நடந்தது.

<u>தடை நீக்கம்</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயால் கால்நடை கள் பாதிக்கப்பட்டது. குறிப் பாக போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை உள்ளிட்ட இடங்களில் 100-க்கும் மேற் பட்ட மாடுகள் கோமாரி நோய் தாக்கி இறந்தன இதை யடுத்து கோமாரி நோயை கட்டுப்படுத்த மாவட்ட நிர் வாகம் தீவிர நடவடிக்கை எடுத்தது. மாவட்டம் முழு வதும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக் கப்பட்டு கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றம் சிகிச்சையளிக்கப்பட்டது. கேமாரி நோய் ஒரு மாட்டில் இருந்து மற்ற மாடுகளுக்கு பரவும் தன்மை கொண்டதால், கால்நடை சந்தைகள் நடத்த தடை விதிக்கப்பட்டது. இத னால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை சந்தை களும் அடைக்கப்பட்டன.

இந்தநிலையில் கோமாரி நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து கால் நடை சந்தைகளுக்கான தடை சமீபத்தில் நீக்கப்பட்டது.

<u>விற்பனை விறுவிறுப்பு</u>

இதையடுத்து போச்சம் பள்ளி வாரச்சந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடியது. இந்தநிலையில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை கூடும் வாரச் சந்தைகளான ஊத்தங்கரை கால்நடை சந்தை மற்றும் கிருஷ்ணகிரி அருகே உள்ள குந்தாரப்பள்ளி வாரச்சந்தை நேற்று சுமார் 2 மாதங்களுக்கு பிறகு மீண்டும் கூடியது.

ஊத் தங்கரை சந்தைக்கு விற்பனைக் காக ஏராளமான மாடுகளும் கோழிகளும் கொண்டுவரப் பட்டன. குந்தாரப்பள்ளி சந்தையில் ஆடு-மாடுகளின் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற் றது.

பொங்கல் பண்டிகை செலவுக்காக, கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் ஆடு, மாடுகளை விற்பனை செய் வதற்காக சந்தைக்கு கொண்டு வந்திருந்தனர். இவற்றை வாங்குவதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரி களும் அதிக அளவில் வந்திருந்தனர்.

## 10 ஏக்கர் விவசாய பயிர்களை நாசம் செய்த யானைகள் வனத்துறையினர் போராடி காட்டுக்குள் விரட்டினர்



சூளகிரி அருகே ராமாபுரம் பகுதியில் காலிபிளவர் தோட்டத்தை யானைகள் நாசம் செய்திருப்பதை படத்தில் காணலாம்.

சூளகிரி அருகே காமன் தொட்டி ஊருக்குள் புகுந்த 35 யானைகள் அங்கிருந்த 10 ஏக்கர் விவசாய பயிர்களை நாசம் செய்தன. அந்த யானைகள் கூட்டத்தை வனத்துறையினர் போராடி காட்டுக்குள் விரட்டினார்கள்.

35 யானைகள் அட்டகாசம்

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே போடூர்பள்ளம் காட்டில் 60 யானைகள் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக முகாமிட்டு அட்டகாசம் செய்து வருகின்றன. கர்நாடகா வனப்பகுதியில் இருந்து வந்த இந்த யானைகள் கூட்டத்தை, மீண்டும் கர்நாடகாவிற்கே அனுப்ப வனத்துறையினர் போராடி வருகிறார்கள்.

இந்த நிலையில் போடூர்பள் ளம் காட்டில் இருந்த யானை களில் 35 யானைகள் நேற்று முன்தினம் இரவு உணவுக்காக அருகில் உள்ள காமன்தொட்டி கிராமத்திற்கு வந்தன. அங்கு ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் வெங்கட்ராஜ் என் பவரின் விவசாய நிலத்திற்குள் புகுந்து அங்கிருந்த பீன்ஸ், நெல், தென்னஞ்செடிகளை யானைகள் கூட்டம் தின்றும், கால்களால் மிதித்தும் நாசம் செய்தன. இதேபோல் ராமா புரம் பகுதியில் காலிபிளவர் தோட்டத்தில் புகுந்த யானை கள் காலிபிளவர் செடிகளை தின்றும், மிதித்தும் நாசப் படுத்தியது.

10 ஏக்கர் பயிர்கள் நாசம்

இதே போல அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் ராதா கிருஷ்ணன், கங்கல்நாயுடு என்ற விவசாயிகளின் மாந் தோப்புக்குள் புகுந்து அங் கிருந்த மாஞ்செடிகளை நாசம் செய்தன. ஒரே நாளில் 10 ஏக்கர் விவசாய பயிர்களை யானைகள் கூட்டம் நாசம் செய்தன. இந்த நிலையில் யானைகள் ஊருக்குள் வந்த தகவல் அறிந்து விவசாயிகள் அங்கு வந்தனர்.

மேலும் வனத்துறையினரும் அங்கு வந்தனர். அவர்கள் பட்டாசுகளை வெடித்து 35 யானைகளையும் விரட்டினார் கள். இதையடுத்து யானைகள் அங்கிருந்து சென்றன. வழியில் பிள்ளைகொத்தூர் சென்ற யானைகள் அங்குள்ள ஏரியில் குளித்தன. நீண்ட நேரத்திற்கு பிறகு யானைகள் கூட்டம் நேற்று அதிகாலை மீண்டும் போடூர்பள்ளம் காட்டிற்கு சென்றன. யானைகளின் தொடர் அட்டகாசத்தால் சூளகிரி பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பால் கொள்முதல் விலை உயர்வு முதல்-அமைச்சருக்கு தமிழ் தேசியக்கட்சி பாராட்டு**

சோமனூர், -

தமிழ் தேசியக்கட்சியின் கோவை வடக்கு மாவட்ட தலைவர்கே.சண்முகம் ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் வறட்சியிலும் பல்வேறு இன்னல்களிலும் சிக்கி கடினமான சூழ்நிலையில் விவசாயிகள் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி இருப்பது விவசாயிகளின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழக முதல்-அமைச்சரின் இந்த அறிவிப்பை தமிழ் தேசியக் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**தேயிலை தூள் உற்பத்தி செய்ய தென்னிந்தியாவில் 40 சிறு தேயிலை தொழிற்சாலைகள் தேவை ஆலோசனை குழு உறுப்பினர் தகவல்**

குன்னூர்,– தென்னிந்தியாவில் தேயிலை தூள் உற்பத்தி செய்ய புதிதாக 400 சிறு தேயிலை தொழிற் சாலைகள் தேவைப் படுவதாக இந்திய சிறு தேயிலை துறை ஆலோசனை குழு உறுப்பினர் டாக்டர் ராமு தெரிவித்து உள்ளார்.

<u>ஆலோசனை குழு</u> இந்திய அளவில் சிறு தேயிலை துறையின் முழுமையான வளர்ச்சியை உறுதிப் படுத்த தேயிலை வாரியம் இந்திய அளவில் ஆலோசனை குழுவை அமைத்து உள்ளது. இந்த ஆலோசனை குழுவிற்கு கோஷிபேபி தலைவராக நிய மனம் செய்யப்பட்டு உள்ளார். தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு இந்த ஆலோ சனை குழுவின் தென் மாநில பிரதிநிதியாக தேர்வு செய்யப் பட்டு உள்ளார். இந்த ஆலோசனை குழுவின் செயல்பாடு குறித்து உறுப்பினர் டாக்டர் ராமு கூறியதாவது:– இந்த ஆலோசனை குழு வின் மூலம் சுய உதவி குழுக் களுக்கு மானியம் வழங்குவது, முதிர்ச்சியடைந்த தோட்டங் களில் மறுநடவு செய்வது, இளைய தலை முறை விவசாயி களுக்கு அவரவர் கிராமத்தில் பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கம் அளிப்பது, ஆண்டு தோறும் அதிகளவில் தேயிலை கவாத்து செய்ய முயற்சி மேற் கொள்வது போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும்.

<u>40 சதவீதம் மானியம்</u> தேயிலை வாரியம் தற்போது அறிமுகப்படுத்தி உள்ள திட் டத்தின் மூலம் 25 ஏக்கருக்கும் குறைவாக உள்ள விவசாயி கள்,சுய உதவிக்குழுக்கள் சிறு தேயிலை தொழிற் சாலைகள் தொடங்க 40 சதவீதம் மானி யம் பெறலாம். தென்னிந்திய அளவில் தேயிலை தூள் உற்பத்தி செய்ய இன்னும் 300–ல் இருந்து 400 சிறு, குறு தேயிலை தொழிற் சாலைகள் தேவைப்படுகிறது. எனவே புதிதாக 2 ஆயிரம் குழுக்கள் அமைப்பதிலும், புதிய தொழிற் சாலைகள் தொடங்குவதிலும் இந்த குழு சிறு தேயிலை துறைக்கு உதவிகளை செய்யும்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோமாரியால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் கிடைக்குமா?

கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, அந்நோய் தாக்கியதால் கால்நடைகளை இழந்து தவிக்கும் மக்களிடையே எழுந்துள்ளது.

திருச்சி மத்திய மண்டலத்தில் நாகை மாவட்டத்தில் முதலில் தொடங்கிய கோமாரி நோய் மெல்ல திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட தமிழகத்தில் மொத்தம் 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கால்நடைகளைத் தாக்கியதில் ஆயிரக்கணக்கான மாடுகள் உயிரிழந்தன.

கோமாரி நோய் தொற்று நோய் என்பதாலும், நோய் பாதித்து இறந்த கால் நடைகளை முறையாக பள்ளம் தோண்டி புதைக்காததாலும், தண்ணீர் வழியாகவும் பல இடங்களுக்கு இந்த நோய் பரவியது. மாடுகள் இறந்துவிட்டதால், அதை இழந்த மக்கள் பெரும் கஷ்டத்துக்கும், நஷ்டத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதுகுறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் கூறியது:

தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 10,000-த் துக்கும் மேற்பட்ட மாடுகள் இந்த நோயால் இறந்துள்ளன. மாடுகள் இறந்தால், பிரேத பரிசோதனை செய்து, அதிலிருந்து மாட்டின் இறப்புக்கான காரணம் கண்டறியப்பட்டு, உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அது கோமாரி நோயால் இறந்ததாக எடுத்துக் கொள்ளப்படு மென கால் நடை பராமரிப்புத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு கிராமத்தில் உள்ள கால்நடை இறப்புப் பதிவேட்டில் கால்நடை இறப்பை பதிவு செய்திருக்க வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர், ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை மாடுகள் இறந்துள்ளன என்பதை கண்டறிந்து, மாடுகளை இழந்து தவிக்கும் அதன் உரிமையாளர்களுக்கு மாடு களுக்கு ரூ.30,000, கன்றுகளுக்கு ரூ.10,000, ஆடுகளுக்கு ரூ.5,000 நிவாரணம் வழங்க வேண்டும். இது தொடர்பாக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளோம் என்றார்.

திருச்சி மண்டல கால் நடைத்துறை இணை இயக்குநர் ஐ. சின்னதுரை தி இந்துவிடம் கூறியது:

திருச்சி மாவட்டத்தில் கோமாரி நோய் அறிகுறி இருந்து, காப் பாற்றப்பட்ட மாடுகளின் உடல் நலத்தை பேணும் வகையில், அரசிடமிருந்து 5 டன் தாது உப்புகள் வரவழைக்கப்பட்டுள்ளன. விரைவில் கால்நடை வளர்ப்போருக்கு அவை வழங்கப்படவுள்ளன.

கோமாரி நோயால் இறந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரசிடமிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்றார்.

மாடுகள் இறந்ததால் பெரிதும் பாதித்துள்ள ஏழை குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விலையில்லா கறவை மாடுகளை அரசு வழங்கிவரும் நிலையில், தற்போது மாடுகளை இழந்து தவிக்கும் தங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டியது அவசியமானது என்கின்றனர் மாடு வளர்ப்போர்.

## காபி ஏற்றுமதி அதிகரிப்பு

சர்வதேச அளவில் தேக்க நிலை நிலவியபோதிலும் இந்தியாவின் காபி ஏற்றுமதி 3 சதவீதம் அதிகரித்துள்ளது. 2013-ம் ஆண்டில் மொத்தம் 3.14 லட்சம் டன் காபி ஏற்றுமதியாகியுள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 3.5 லட்சம் டன் காபி ஏற்றுமதியானது. ஏற்றுமதியான காபியின் மதிப்பு ரூ. 4,728.86 கோடியாகும். முந்தைய ஆண்டு இது ரூ. 4,637.87 கோடியாக இருந்தது.

சர்வதேச சந்தையில் அராபிகா, ரொபஸ்டா ஆகிய காபி ரகங்களில் விலை 30 சதவீத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. இதைக் கருத்தில் கொண்டு உடனடி காபித்தூள் (இன்ஸ்டன்ட் காபி) ஏற்றுமதியில் இந்தியா இறங்கியதால் ஏற்றுமதி அதிகரித்ததாக காபி வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்ஸ்டன்ட் காபித்தூள் மறு ஏற்றுமதி 56 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்தம் 70,833 டன் ஏற்றுமதியாகியுள்ளது. முந்தைய ஆண்டு இது 45,457 டன்னாக இருந்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் அராபிகா காபி மொத்தம் 55,082 டன் ஏற்றுமதியானது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 5 சதவீதம் குறைவாகும். அதேசமயம் ரொபஸ்டா ஏற்றுமதி 6 சதவீதம் அதிகரித்து 1,65,087 டன்னாக இருந்தது. இத்தாலிக்கு மிக அதிகபட்சமாக 77,041 டன் காபி ஏற்றுமதியானது. ஜெர்மனிக்கு 30,571 டன், ரஷியாவுக்கு 20,753 டன், பெல்ஜியத்துக்கு 17,431 டன் காபி ஏற்றுமதியானது.

அராபிகா காபி ரகம் ஒரு பவுண்ட் விலை 110 சென்ட்டுக்கு சர்வதேச சந்தையில் விற்பனையானது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 30 சதவீதம் குறைவாகும். ரொபஸ்டா விலை 17 சதவீதம் சரிந்து ஒரு பவுண்ட் 75 சென்ட்டுக்கு விற்பனையானது. ஒரு டன் விலை ரூ. 1,50,297-க்கு விற்பனையானது. கடந்த ஆண்டு ஒரு டன் விலை ரூ. 1,51,938 ஆக இருந்தது. இந்தியாவில் காபி சீசன் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையாகும். இப்போது காபி பயிர் அறுவடை நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

## தீவிரமாகும் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம்

ராமேஸ்வரம் தீவு நாட்டுப் படகு மீனவர்கள் தொடர்ந்து நான்காவது வெள்ளிக்கிழமையும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த பாம்பனைச் சார்ந்த 18 நாட்டுப் படகு மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த சம்பவத்தை கண்டித்து ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் நாட்டுப் படகு மீனவர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நான்காவது நாளாக வெள்ளிக்கிழமை காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் படகுகள் ஆழம் குறைந்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

சிறைபிடிக்கப்பட்ட பாம்பன் நாட்டுப் படகு மீனவர்கள் 18 பேரை விடுதலை செய்யக் கோரி இன்று முதல் பாம்பன் மற்றும் ராமேசுவரம் பகுதி நாட்டுப்படகு மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். 600 படகுகளில் கறுப்புக்கொடி கட்டி போராட்டத்தில் குதித்தனர். படகுகள் அனைத்தும் கடற்கரை ஓரம் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளது. 3 ஆயிரம் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் தீவு மீனவர்கள் தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தை தொடர்ந்து வியாழக்கிழமை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மீனவர்களின் விசைப்படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.

நாட்டுப் படகு மீனவர்களின் தொடர்வேலை நிறுத்ததை தொடர்ந்து மீன் சந்தையில் மீன்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ 200 ரூபாய்

வரையிலும் விற்று வந்த விலை மீன் தற்போது ரூ 300 வரையிலும் விற்க்கப்படுகின்றது. ரூ. 80 க்கு விற்ற சூடை முன் ரூ 100க்கும், ரூ. 160க்கு விற்று வந்த நகரை மற்றும் சூவாரை மீன்கள் ரூ 200ஐ எட்டிப் பிடித்தது.

அடுத்தகட்டமாக மீனவர்கள் ஜனவரி 9ம் தேதி உண்ணாவிரதப் போராட்டமும், அதனைத் தொடர்ந்து ரயில் மறியல் போராட்டமும் நடத்த ஆயத்தமாகி உள்ளனர்.

இதுகுறித்து நமது செய்தியாளரிடம் பேசிய மீனவர் பிரதிநிதி ராயப்பன் கூறியதாவது,

"தொடர்கதையாக நடைபெற்று வரும் மீனவர்கள் மீதான தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதற்கு இரு நாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்த மத்திய, மாநில அரசுகள் விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கை சிறைகளில் வாடுகின்ற தமிழக மீனவர்களையும், இந்தியச் சிறைச்சாலைகளில் உள்ள இலங்கை மீனவர்களையும், அவர்களது விசைப்படகுகளையும் விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இரு நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேஸ்வரம், பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

அடுத்தகட்டமாக மீனவர்கள் ஜனவரி 9ம் தேதி மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டமும், அதனைத் தொடர்ந்து ரயில் மறியல் போராட்டமும் நடத்த ஆயத்தமாகி உள்ளோம், என்றார்.